# சி.எம்.ஆர்.எல். மேலாண்மை இயக்குநராக பிரதீப் யாதவ் பொறுப்பேற்பு



**சென்னை, மார்ச் 18:** சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் (சி.எம். ஆர்.எல்) மேலாண்மை இயக்குநராக மூத்த ஐ.ஏ. எஸ். அதிகாரி பிரதீப் யாதவ் (படம்) புதன்கிழமை பொறுப்பேற்றார்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக பங்கஜ் குமார் பன்சால் 6 ஆண்டுகளுக்கு மேலாக பதவியில் இருந்தார். இவர் தற்போது நில நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு பதிலாக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பிரதீப் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக தமிழக கைத்தறி, ஜவுளி மற்றும் காதி துறை செயலராக இருந்தார். அதற்கு முன்பு, பள்ளி கல்வித்துறைச் செயலராக பணியாற்றியவர்.